உ

கடவுள் துணை.

# விநோத விடிகதை



இவை-சிறுமணவூர்,

முனிசாமிமுதலியா ரவர்களால்

இயற்றப்பட்டு,

ஆதிபுரி

இரத்தினவேலு முதலியாரது

வாணீவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1911.

சென்னை நாராயணமுதலி வீதி

52-வது நெ. வீடு.

கடவுள் துணை.

# விநோதவிடுகதை.

வருங்காலங் நிகழ்ந்துரைப்பான் சாஸ்திரியல்ல, வாங்கியுண்ண வழிகார்ப்பான் முடவனல்ல, கரும்பழுதல் மலா முடிப்பான் சுதனுமல்ல, துகளில் பசும்புல் காப்பான் தோட்டியல்ல, பருமமுடல் நீரணிவான் பரமனல்ல, பலரில்லந் தான்புசிக்கும் பரதசியல்ல, சிறந்தவனக் கிளிபோன்ற மொழியினுளே சீருவிக்கதையை செப்புவாயே. (விநாயகர்)

கூத்துதனக்கே யலேவான் குடியனல்ல, குலமில்லாக் குலம்புகுந்தான் பிடியனல்ல, வாத்திதனை யேபடிக்கான் வம்பனல்ல, மயில்கோழி மிகவளர்த்தான் புறவனல்ல, தேற்றுங்தேன் தினை யுண்டான் வேடனல்ல, திகழ்வேடந் தான்தரித்தான் சித்தனல்ல, பூத்தமலர்க்கணையுடையாள் தேவியாளே பெண்மயிலே இக்கதையை புகலுவாயே. (சுப்பிரமண்யர்)

காணுவதிற் கண்ணிற்படான் ஒறைந்து போகான் கண்பூதம் நிகரிடஞ் சஞ்சரிப்பான், பூணுகின்ற வஸ்திரமுந் தனைபரிப்பான் புவியெங்கும் போர்புரிந்துக் கோஷ்டங் கொள்வான், கோணமடை மேருவையும் வேர்பரிப்பான், கொடிபலத் தருக்களையு மொடியச் செய்வான், வேணபேர்க காணந்தம் விளையச் செய்வான், விபரமாயிக்கதையை விளம்புவாயே. (காற்று)

ஈரிரண்டு கம்பமுண்டு பண்டபமுமல்ல, இலைபரித்து குலைவளர்க்கும் வாழையல்ல, கோர்கொம்புகளை யேந்தும் வேடனல்ல, கூசாமலே புடைக்கு முறமுமல்ல, தாரகுழை மிகவிருக்குஞ் ஜலதாரியல்ல, கட்டி கறந்தாள் விளக்குந் தடப்பமல்ல, கூறுகின்ற விக்கதையின் பொருளைச் சொன்னால் குருவென்றே ஆயிரயபொன் கொடுக்கலாமே. (யானை)

கட்டியடித்தே யகற்றுங் கருணையல்ல, காண்மாரிப் பாயவிடும் வாய்க்காலல்ல, வெட்டிமரித்துத் திரும்பும் மடையுமலல, விலங்கினத்தின் தோல் சுமக்கும் பொதியுமல்ல, பட்டமுடி தான் தரிக்கும் வேந்தனல்ல, பலநாளுமிருப்பை யுண்ணும் பசிதீராது, திட்டனமன் ஜெயிக்கும் போர் வடியினுளே சுந்தரியே யிக்கதையைச்செப்புவாயே. (குதிரை)

கொண்டையிட்டு தான் மினுக்கும் பெண்டுமல்ல, குலவுமணி கழுத்திலிடும் பூஷணமுமல்ல, துண்டுவெளை கொம்புமுண்டு. மரமுமல்ல, துவரைமரை யில்லுமுண்டு புவனமல்ல, செண்டிப்பூ கொளம்புமுண்டு நதியுமல்ல, செலங்கை கொப்பி தார் தரிக்குஞ் சித்த

ல்ல, வண்டுநிகர் விழியாளே மானே தேனே வளமான விக்கதை யை வருந்துவாயே. (மாடு)

கிட்டநின்றால் எட்டிவிடும் பாணவயல்ல, கேவலா யொடுங்கி நிற்கும் லஞ்சையல்ல, கட்டுதுணி சவளி கொள்ளுங் செட்டியல்ல கனத்தமுத்து கல்லெடுக்கும சவரையல்ல, குட்டியிட்டுச் சுவரிலொ ண்டுந் தேளுமல்ல, குலத்திலே யிகழ்ச்சி யென்பார் புலையனல்ல, வட்டமதிபோலிருக்கும் முகத்தினளே வஞ்சியரே கொஞ்சதுகுவரு ந்துவாயே. (கழுதை)

குலைகுலுக்கும் அழுகலுண்டு தேங்குமல்ல, குலத்திலிசைக் தொழுகாது வேசியல்ல, வலியசண்டைக் கேபுகரும் வண்டவனல்ல, மனைபுகுந்து அடிமயக்குந திருடனல்ல, அலைந்துமிகத் தானுழலும் பித்தனல்ல, அதட்டிநின்றால் கால்தூக்கிக் காட்டச்சொல்லு, கலை போன்ற மிரண்டவழி யாரணங்கே கண்மணியே யிக்கதையின் கரு த்தைச்சொல்லே. (நாய்)

பள்ளம்வெட்டி குழிபறிக்கும் ஓட்டனல்ல, பருத்தன்றுங் கிழ ங்கெடுக்கும் வில்லியல்ல, பிள்ளைகளை மிகப்பெருக்கும் பிரமனல்ல பேதையிடஞ் சஞ்சரிகதுந் தரித்திரமல்ல, உள்ளதெல்லாம் வாங்கி யுண்ணுந் தொழும்பனல்ல, ஊரைசுத்திப் படுத்துழுவா னுறங்கமா ட்டான், சொல்லுகின்ற யிக்கதையின் பொருளைச்சொன்னால் சுற்ற மென்றே உன்வாக்கை சூழலாமே. (பன்றி)

பார்த்துமுகம் பலகாட்டுங் கண்ணாடியல்ல பசகளிடசேஷ்டை செய்யும் வேசியல்ல, கூத்தாடி பணம்பரிக்குந் தாசியல்ல, குந்திச த்து மிருக்காது நாயுமல்ல, போற்றுகின்ற கொடியாகும் புனலும் அல்ல, போர்புகுந்து ஜெயமடையும் விஜயனல்ல, சாற்றுகின்ற விக் கதையின் பயனைச் சொன்னால் சாணமென்றே அவரடியைச் சார லாமே. (குரங்கு)

படுக்கைக்கே யரைதேடுங் கத்தியல்ல, பாலுக்குப் பாத்திரந் தேடும் பசுவுமல்ல, துடுக்குக்கே யிருள்தேடுங் கூத்தியல்ல, சொல் லுக்கே பதுங்கிநிற்குந் தோகையல்ல, இடுக்குக்கே தானோடுந் தே ளுமல்ல, இரைச்சிக்கே வழிபார்க்கும் நாயுமல்ல, படித்துவிட்ட இ க்கதைக்குப் பயனைச் சொன்னால் பரமனென்றே அவரடியைப்பணி யலாமே. (பூனை)

நீலக்கண்ணாடி கொள்ளுங் கரையல்ல, நேத்தியுடன் தான் விரி க்குங் கடையுமல்ல, கால்தூக்கி நடனமிடுங் காளியல்ல, காலில் கொண்டே பாம்பாட்டுஞ் ஜோகியல்ல, மேல் நிறைந்த பொட்டுமு ண்டு வானமல்ல, மேன்மைமிக்க கொண்டாடும் வேந்தனல்ல, பா லுக்கு நிகரான மொழியினளே, பத்தினியே யிக்கதையை பகருவா யே. (மயில்)

பச்சைநிற மேனியுண்டு விஜயனல்ல, பவழயிதழ் வாயுமுண்டு கோவையல்ல, உச்சிதலை பேடியுண்டு மைநாவல்ல, உட்கழுத்தில்

நீலமுண்டு நக்கனல்ல, இச்சையுடன் சிறையிலிடுந் திருடனல்ல, இ
னிமைமொழி தான்புகழும் மனிதனல்ல, கச்சைதனக் கேயடங்கா
ஸ்தனத்திருமே காதழியே யிக்கதையைக் கழறுவாயே (கிளிப்பிள்)

கருகருத்த நிறமுடனுங் காலனல்ல, கண்கலங்கித பார்வைகொ
ளுங் கபோதியல்ல, திருச்சலெண்ணைக் குடிபுகழும் மடந்தையல்ல,
சிறுவரிடம் பரித்துண்ணும் திருடனல்ல, பருப்பரிசைக் கண்டலே
வான் பார்ப்பானலல, பார்த்திருக்கக் கொள்ளை கொள்ளுஞ் சிகப்ப
னல்ல, திருநிலத்தின் நிகருளே தெய்வமானே தேவியரே யிக்கதை
யை தெளியச்சொல்லே. (கப்பல்)

மண்ணலைந்து சேர் துவைக்குங் குயவனல்ல, மதித்துவயல்
போல் காக்கும் மனிதனல்ல, கண்ணிரண்டு குழிந்து நிற்கும் குரு
டனல்ல, கற்கோட்டை யுள்ளிருக்கும் வேந்தனல்ல, எண்ணமுடன்
பகைஞர் பசியைத் தீர்ப்பான் ஈரைந்து கரமுடையோன் பரமனல்ல
பெண்ணனங்கே யிக்கதையின் பயனைச்சொல்லி பக்குவமாய் ஆயி
ரம்பொன் பரித்திடாயே. (நண்டு)

மரத்திலொட்டியே வசிக்கும் வவ்வாளல்ல, மரவுரியைத் தரித்
திருக்கும் யோகியல்ல, சிரசில் கங்கைச் சடையுண்டு மூடமுமல்ல,
உருவுகொண்ட பருத்திருக்குங் கட்டியல்ல, உச்சியிலே குடுமியுண்
டுசெட்டியல்ல, கரத்தின்வளை கலகலென நடையினுனே கற்பகமே
அற்புதத்தை கண்டிடாயே. (தேன்கூண்டு)

சொத்துக்கே வழிபார்ப்பான் பகையாளியல்ல, குளிநீருக்கே
யிசைவான் தபசியல்ல, புத்திரனுல் தானிறப்பா னிரண்யனல்ல,
போற்றுமலர்க் கரசளிப்பான் குபேரனல்ல. நத்தினவனுக்கே நான்
குமுகமாயாவான், நந்தன் முகமாய்ப் போற்றியரைப் பெற்றெடுப்
பான், சித்தத்தில் யிக்கதையின் பயனைக்கொண்டு சேபிழையே
சபைநடுவே சொல்லுவாயே. (வாழைமரம்)

காதல் கொண்டே சரந்தொடுக்கும் மதனுமல்ல காயமெங்கும்
வெளுத்திருக்கும் பாண்டுமல்ல, வேதனையாய் சேர்ந்தணையும் புரு
டரல்ல, விலைகாட்டி பணம்பறிக்கும் விலக்குமல்ல மாதர்கள் மேல்
வீற்றிருக்கும் பணியுமல்ல மணஞ்செய்தே வாழும் மணவாளனல்ல
போதமுரை கற்றுணர்ந்த பெரியோர் முன்னே பேசினேன் இதன்
பொருளை புகல்வீரையா. (மல்லிகைப்பூ)

சோலைதண்டே யுள்ளிருக்கும் மந்தியல்ல துடிசிகப்பு மஞ்சவி
டுந் தோகையல்ல, ஆலைவைத்தே யரைக்கவருந் தனவானல்ல அரு
ட்சுவை தந் தேயளிக்குந் தேனுமல்ல, கோலுகொண்டுச் சார்விழியுங்
கள்ளுமல்ல, கொப்பறையிற் கொண்டுவிடும் எண்ணையல்ல, வாலை
யெனப் பருவமுள மானேதேனே வண்மையாய் யிக்கதையை வழூ
த்திடாயே. (கரும்பு)

ஒற்றைக்கொம்பி லேறிநிற்கும் பட்சியல்ல, உட்கழுத்தி லரும்புமிட்டு புட்பமல்ல, கொத்துவட மணிதரிக்கும் கொட்டி சடபல்லிளிக்குங் குரங்குமல்ல, வெற்றிசண்டை தானறியும் மல்லனல்ல, விருத்து கலம் புகுந்து ழலுங் கத்தியல்ல, கொத்துமணித் தாவடங்கள் பூண்டமாதே கோதையரே இக்கதைதனைக்கூறுவாயே. சோளம

கட்டிகளம் போர்புரியும் வீரனல்ல, காளியெங்குஞ் சுற்றிவருங் கடம்பனல்ல, இட்டமுடன் மனையரிலும் புருடனல்ல, இருப்பவர் மேற் றுஜங்தொடுக்கும் பித்தனல்ல, சட்டமுடன் குத்துக்கே சளைக்கமாட்டான், சகலருக்கும் வைத்தெரிச்சல் தள்ளிக்கார்ப்பான், அட்டதிக்குச் சுத்திவரும் மதிக்கொப்பான ஆரணங்கே யிக்கதையை மதிந்திடாயே. (நெல்லு)

முஞ்சள் தனை மெய்யணியும் மடைந்தயல்ல, மணம்புணர்ந்தே மயக்கமிடுந் தாதியல்ல, கொஞ்சிபல பேரேந்தும் குழந்தையல்ல, கொற்றவர்க ளிடம்புகருந் திருவுமல்ல, பிஞ்சகன்மேல் நின்றாடும் பாம்புமல்ல, பிரியமுடன் தனையருத்தம் மதுவுமல்ல. கொஞ்சுகிளி மொழியணங்கே பருவமானே குணமான யிக்கதையைக்கூறுவாயே (எலுமிச்சம்பழம்)

வழுத்துவே குடலுமுண்டு ஜீவிப்பதல்ல, வரிபிரம்பு முதுகிலுண்டு பிரம்புமல்ல, பழுத்தநிற மேனியுண்டு கிழவனல்ல, பலவிடத்தில் தான் படுக்கும் பித்தனல்ல, குழித்தபெரு வாயருமுண்டு பேழையல்ல, கொடியிட்டே தான் வசிக்கும் வேந்தனல்ல செழித்த மலர் முகத்தாளே மானே தேனே செண்பகமே யிக்கதையை செப்புவாயே. (பூசனிக்காய்)

தலைபெருத்துத் தடிமுழங்கு மகப்பையல்ல, தன்வாயால் மான் கொத்தும் மாவையல்ல, வலிய புயங்கட்டி யேழும் மல்லரல்ல, வாழ்குலத்தையே யழித்தான் சகுனியல்ல, குலைகளவுக்கே யிசைவான் சூரனல்ல, குவலயத்தில் நம்மாலே குலைஞ்ஞானர் சிலையனைய வடிவாளே ரூபவல்லி சிரானயிக்கதையைச்செப்புவாயே கோடரலி

காட்டிவிற்குங் குண்டுண்டு கோலியல்ல, கனியுண்டு வெட்டுண்டு வங்கமல்ல, வாடியிட்டச் சுருளுண்டு வோலையல்ல வழுத்துகளி மண்ணுமுண்டு பூமியல்ல, பாட்டியைக்கும் சபைக்குவரும் பரத்தையல்ல, பலரிடமு முன்னிருந்து பகரச் செய்யும, நாட்டினைக் கீடல்லா நயன மானே நரயகமே மிக்கதையை நாட்டுவாயே. (கொட்டைப்பாக்கு)

கண்டித்தே குழிரிகுவான் குழியுங் கொள்வான் கசக்கி ஜலம் பிழிந்திடுவான், வண்ணனல்ல அண்டிநின்றுத் தானுழல்வார் தாசனல்ல, அகன்றிடுவார் பாமுழல்வார் விலைமாதால்ல, கொண்டு குடமேந்தி நிற்பார் சோதியல்ல, கூச்சவிட்டே வகுபுகையின் வண்டி

மல்ல, தண்டைசிலம் போசையிடும் பாதத்தாளே தந்திரமா யிக்கதையை சாற்றுவாயே. (செக்கு)

காலுமிரண்டுண் டெழுந்து நடக்கமாட்டாள் கண்ணிரண்டும் மேல்சிமிட்டி விழிக்கமாட்டாள் கோலுண்டு தானருப்பாள் கத்தியல்ல, கூன்வளர்ந்து முதுகுமுண்டு நிமிரமாட்டாள் பாலுகந்து குடித்தறியாள் பாக்குத்தின்பாள் பகருமணல் மூட்டி யிலைவடித்தே வாழ்வாள் மேலினிய வாசமது வீசுமானே மெல்லியரே கதை விபரம் விடிவிப்பாயே. (பாக்குவெட்டி)

உடல்நீண்ட பாதமுண்டு கிண்ணமல்ல, உச்சிதமெய்க்கண்களுமுண்டிந்திரனல்ல, முடியில கலசுங்குண்டு குல்லாவல்ல முனைமுனையைப்போல் துவாரமுண்டு புருசுமல்ல இடநிறைந்த சபையாடும் லவசல்ல இசையுடன்படி நடக்குந் தாசியல்ல குடைத்தநிகர் முகமாதே கோமளாங்கிநீ கூசாமல் கதைவிபரங் கூறுவாயே. (நாகசுரம்)

வாய்தனிலே நெருப்பெரியும் பேயுமல்ல வாய்வையுண்டு வயர் வளர்க்கும் பாம்புமல்ல, தேய்வுடன் வாய்வைக் கூட்டுந் தேவனல்ல செங்கையால் மூடித்திறக்குஞ் சிமிழுமல்ல, பாய்படுத்துக்கால்கிளப்பும் பம்பரத்தையல்ல படியிலுள்ள சொல்லரில் வாழ்மங்கையல்ல, செய்போன்ற குகலைமொழி யாரணங்கே சித்திரமே யிக்கதையை செப்புவாயே, (துருத்தி)

மோதிரமும் வளைபூணும் மாதுமல்ல, முழுதலைக் கெணணெய் இடும் வணிகனல்ல, சோதிடனல்ல சடைவிடுச்சுங் கூந்தலல்ல குச்சுதொங்கல் சுங்குங் கூத்தாடியல்ல, சோதிமெய்யில் நூலணியும் மறையோர் நல்லகொடுத்திடக் கால்பிடித்தோடுஞ் சுனங்கனல்ல சீதமலர்போன்றயிரு அடியினளே செண்பகமே யிக்கதையைச் செப்புவாயே. (செறப்பு)

பஞ்சிதனைப்பூசித்து அகம் பாதுகார்க்கும் டலநாளும் போர்வையிட்டுப் படுத்துறங்குந் தஞ்சமென விழுந்தவர் கடலையைத்தூங்கும் காழ்வில்லாதுஞ் சகலமெத்தைதனிலே நாளும் வஞ்சமுடன் மேல்விழுந்து மருவிப்பார்க்கும் வசியமுறு காசிவேசி யல்லத்தேறும் தஞ்சமென யோகிமுதல் வணங்கச்செய்யும் தார்குழலேயிக்கதையை சாற்றுவாயே. (தலைகாணி)

அச்கினியில்நின்று விளையாடி பார்ப்பான் அம்புவியில் யாவருக்கு பச்சமீபாவான் பக்குவமாய்க் கொலைசெய்து மருவி வாழ்வானது வேட்டைசெய்வான் தனிவழிக்குத் துணையாகிக் காவலாவான் முக்கனியும் சர்க்கரையு பாலோடொத்த மொழியணங்கே யிக்கதையை மொழிகுவாயே. (துப்பாக்கி)

கிள்ளுவதுபாற்பதுவுந் தேய்ப்பதுண்டு கீர்த்தியுடன் தாணெடிக்கி குலுக்கலுண்டு அள்ளியெண்ணெய் நீருடன் சேர்ந்தடலுண்டு அனைவர் பின்னே சித்திக்கை யேற்பதுண்டு கள்ளருந்துங் காளை

யைப்போற் றிரிவதுண்டு சுருதிமரியாதை கெட்டு நடப்பதுண்டு, பள்ளிமயில்போன்ற நடையுடை மானே பொற்கொடியே யிக்கதையைப் பகலுவாயே (பொடி)

விரித்து கீழ்போட்டதனிற் படுப்பதுண்டு விரைந்தவரை பிடித்ததனில் படைப்பதுண்டு, கரித்துவிழ நெருப்பிட்டு மூட்டலுண்டு கண்கள் புகைந்தெழப் புரட்டிக் கொளுத்தலுண்டு, உரிந்த கடித்தெழுந்து கந்தவுமிழீண்டு, உலகிலிவை யறிவா யுணர்வை யுண்டு, நிருத்தமிடு மயில்போன்ற வழகினளே நேரிழையே யிக்கதையை நிகழ்த்துவாயே. (சுருட்டு)

முரிப்பதுவும் பார்ப்பதுவும் முகர்வதுண்டு முன்வாயைத் திறக்காமல் நிக்கலுண்டு, விரிப்பதுவும் தூங்குவதும் சேர்க்கலுண்டு, மெய்வாட்டிக் கண்டுஜலங் குளிப்பதுண்டு, பிரிப்பதுவுங் கட்டுவதுங்கொள்வதுண்டு, பிற்ற முற்றப்போட்டணிந்துச் சுவல்வதுண்டு, பருத்தமுலை யாரணங்கே பருவமானே பக்குவமா யிக்கதையைப் பகருவாயே. (புகையிலை)

தாயாகிப் பிள்ளையுடன் தனித்து நிற்காள் கட்டாமல பலரளிக்குங் கொத்துங்கொள்வாள், ஓயாமல் மேல்கீழாய் நின்றுந் தேய்வாள், உள்ளதெல்லாந் தானுருட்டிக் கழுவிச்சேர சொல்லால், வாயாடும் பெண்கள் கையின் வலுவைப்பார்ப்பாள் வனிதையல்லப் புருடனல்ல மற்றோரல்ல, வாயார யிக்கதையின் விபரஞ்சொன்னால வஞ்சியே யுன்னடியை வணங்குவேனே. (அம்மி)

குலுக்கலுண்டு சிரிப்புண்டு குதிப்புமுண்டு கொத்துமணி முத்துவடங் கொள்வதுண்டு, அலுப்புண்டு வரைப்பதுண்டு வாட்டமுண்டு அரையில்கலை ஒட்டியான மணிவதுண்டு, தலுக்குண்டு மினுக்குண்டு தரிப்புமுண்டு தாசியவள் வேசியுங் கூத்தாடியல்ல, வலைக்குநிகர் விழியணங்கே வஞ்சிமானே வண்மையா யிக்கதையை வழுத்துவாயே. (பதுமை)

குடுவையைப்போல் வாயுமிரு கண்ணுமுண்டு கூரணிந்த வாலுடன் கூண்டடைவதுண்டு, குடுகையறு மன்னமதைக் கொள்வதுண்டு, துலங்குறு நங்கையர்க்கு ளமர்வதுண்டு, படுக்கைகொள்ள யிறப்படுப்பிற் செல்வதுண்டு, பாவமொடு செய்தவெல்லாம் படைப்பதுண்டு, வடிவமது மிகவுருவாய் உய்த்தமானே மங்குயிலே இக்கதையை பதித்திடாயே. (அகப்பை)

விதைவிதைக்கப்பாத்தி சலமிறைப்பதுண்டு, வித்துவேர் தழையில்லாக் காய்ப்பதுண்டு, குரைக்காமற் பனிமழைக்கே யெடுப்பதுண்டு, குற்றமென்றுங் கொள்ளாமற் கூய்ப்பதுண்டு, உரைக்குமுனே தானெடுத்துஞ் சமைப்பதுண்டு, உள்ளபடி சுவைக்குமற் றெவ்வகைக்குமுண்டு, கரைபுரளக் காமநீர் பெருகுமானே கண்மணியே யிக்கதையைக் கழறுவாயே. (உப்பு)

கூண்டிலே யிருக்குமது பட்சியல்ல கொழுந்தோடிப் போகுமது யிரைதிண்ணாது, காட்டிலே விட்டுவிட்டால் பறந்தே போகும் கனத்தமன்னர் வாசலிலே காவலாகும், ஈட்டிகத்தி பிடித்தவர்க்கு எதிரே நிற்கும் இரவிலே துணையாகுங் காலையிலலே, நாட்டிலே யிக்கதையை சொல்வாராகில நமக்கவரை குருவென்றே நம்பலாமே. (அய்பு)

தாதுமாதுளைக் கோவைக் கனிப்பழம தண்டில்லாதவோர் தாமரைப்பூத்ததும், நீரில்லாதவோர் பொய்கை கரையின்மேல ஆளில்லாத ரெண்டன்னங்கள் போனதும், காலில்லாதவன் ஓடித்தடுத்ததும் கையில்லாதவன் கட்டியணைத்ததுங், வாயில்லாதவன் தின்றக்கனிப்பழம் கண்ணில்லாதவன் கண்டுமகிழ்ந்ததே. (சொக்கட்டான்)

ஆதிகாலத்தில் அப்பனைவிட்டவள் அறிவுள்ளோர்கள் கையில் அடுத்தவள், வேதனையாகவே மேனிகிழிந்தவள், வெட்டுகள் குத்துகள் கட்டுப்பட்டுண்டவள் ஏதுகாணிவள் மஞ்சள் குளிக்கிறாள் எந்தமைவிட்டுத் தன் மேனி மினுக்கிறாள் ஓதுசாணிவள் தாசியுமல்லவே உரைத்தவர்க்காயிரம் பொன்னுந் தருவேனே. (பனவோலை)

கங்காநதிபுனல் மூழ்கிக் கரையிமேலேறி கதிரவனைகண்டுடலங் காய்ந்துவெற்றி பொங்குகடல் சீனியுண்டு ரிஷபமேறி பூலோகம் காக்கவரும் சிவனுமல்ல இங்கிதனை அறிந்துசொலலும் பெரியோர் தம்மை எப்போதும் குருவென்றே வணங்குவேனே. (கருவாடு)

மூன்றுலை யறுப்புண்டு கட்டுமுண்டு முனைகுலைந்து பெண்களெல்லாஞ் சீச்சீயென்ன பின்னாலே கிழியுண்டு தையனல்லாள் பிடித்திருப்பார் கைக்குள்ளான சுத்தக்காரி சொன்னாலும்போகொஞ்சம் வேலைக்காரி சொகுசான யிக்கதையைச் சொல்லுவீரே. (துடப்பம்)

பிஞ்சுண்டு பூவாது கசக்குங்காயும் பின்னலெனவே யிருக்குங் கொடிகளெல்லாந் துஞ்சிடவே நீரில்விழச் சுருட்டிக்கொள்ளும் சூரியனைக்கண்டாக்கால மலர்ந்திருக்கும் பஞ்சவரு மவருறவு மாலுக்காகார் பாருலகிவிக்கதையை பகருவீரே. (வலை)

பட்டத்து தேவியவள் சொகுசுக்காரி பரிகாயிளங் கொடியாள் பாரின்மீது கட்டுதற்கு மணப்பதற்குங் கிள்ளுதற்குங் கட்டமுகி பொருத்திருப்பாள் காசுக்கென்றால் இட்டமுடனே வருவாள் தாசியல்ல யேந்திழையே யின்னவளென்றியம்புவாயே. (வெத்திலை)

வினோதவிடிகதை.

முற்றிற்று.